03.03.2025

RLTOP.No.11/2022

எ.ம.சா.1 சாட்சி வேல்ராஜா இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது கூடுதல் சாட்சியத்தை எழுத்து மூல கூடுதல் நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

மனுதாரர் எனக்கு எழுதிகொடுத்த சம்மத ஒப்புதல் உறுதிமொழி பத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**04.04.2021ம் தேதியிட்ட சம்மத உறுதிமொழி பத்திரம் எ.ம.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் மனுதாரருக்கும் அவருடைய உறவினரான நடராஜன் என்பவருக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புகளின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**30.04.2022ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் எ.ம.சா.ஆ. 14 ஆகவும், அதனை அவர்கள் 04.05.2022ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (2 எண்ணம்) எ.ம.சா.ஆ. 15 ஆகவும், 01.11.2022ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் எ.ம.சா.ஆ. 16 ஆகவும், அதனை அவர்கள் 05.11.2022 மற்றும் 11.11.2022 ஆகிய தேதிகளில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (2 எண்ணம்) எ.ம.சா.ஆ. 17ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது குடும்ப அட்டையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சாட்சி வேல்ராஜா என்பவருடைய குடும்ப அட்டையின் கணினி நகல் எ.ம.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்மத உறுதிமொழி பத்திரம் சம்பந்தமாக எனது எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்மத உறுதிமொழி பத்திரம் எந்தகாலத்திலும் மனுதாரர் எழுதிகொடுக்கவில்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக இந்த ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணத்திற்கும் மனுதாரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரரின் கையெழுத்தை மோசடியாக ஏற்படுத்தி மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காலவரையரை சட்டத்தின் படி மேற்படி ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

நான் மனுதாரருக்கு எ.ம.சா.ஆ.14 மற்றும் எ.ம.சா.ஆ. 16 ஆகிய வழக்கறிஞர் அறிவிப்புகளை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்புகளை மனுதாரரும் நடராஜன் என்பவரும் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் எ.ம.சா.ஆ15 மற்றும் எ.ம.சா.ஆ. 17 ஆகிய ஒப்புகை அட்டைகளில் உள்ள கையெழுத்து மனுதாரரின் கையெழுத்து இல்லை என்றாலும் சரியல்ல. நான் மனுதாரருக்கு வாடகை தொகையை செலுத்தாமல் பாக்கி வைத்துள்ளதாலும் மனு சொத்து மனுதாரரின் சொந்த உபயோகத்திற்கு தேவைப்படுவதினாலும் நான் மனு சொத்தை காலி செய்ய கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கப்படவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.